ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதிவிசேஷமானது

අංක 1791/8 - 2012 දෙසැම්බර් මස 31 වැනි සඳුදා - 2012.12.31

*1791/8 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி I : தொகுதி (I)- பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டம்***

*2(1) பிரிவின் கீழான கட்டளை*

*2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவின் கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம், நிதி, திட்டமிடல் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், இக்கட்டளை மூலம் 2013 சனவரி ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறும் வகையில், இதற்கான அட்டவணை I இல் நிரல் I இல் குறித்துரைக்கப்பட்ட நபர்களிடமிருந்து அவ்வட்டவணையின் நிரல் II இல் அவற்றிற்கு நேரொத்த பதிவில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள வீதத்தில் விமாமேறல் அறவீடொன்று விதிக்கப்பட்டு அறவிடப்படல் வேண்டும் எனவும், அதனை அறவீடு செய்யும் போது அட்டவணை II இல் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள கட்டளை பின்பற்றப்படுதல் வேண்டுமெனவும் இத்தால் கட்டளையிடுகிறேன்.*

*2003, ஓகத்து, 29 ஆந் திகதிய 1303/22 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமான அறிவித்தல் மூலம் 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் கீழால் பிரகடனப்படுத்தப்பட்ட கட்டளை இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது.*

*மஹிந்த ராஜபக்ஷ,*
*நிதி, திட்டமிடல் அமைச்சர்.*

*நிதி, திட்டமிடல் அமைச்சு,*
*கொழும்பு 01.*
*2013*

**அட்டவணை I**

| | நிரல் I | | நிரல் II |
|---|---|---|---|
| (i) | இலங்கையினை விட்டு வெளியேறுகின்ற விமானமொன்றில் ஏறும் நபரொருவருக்கு | ஐ. அ. டொ. | 25.0 |
| (ii) | இலங்கையினை விட்டு வெளியேறுகின்ற கப்பலொன்றில் ஏறும் நபரொருவருக்கு | ஐ. அ. டொ. | 5.0 |



இவ்வர்த்தமானிகளை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

## அட்டவணை II

*2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டத்தின் 17 ஆம் பிரிவின் கீழான ஒழுங்குவிதிகள்*

*சுருக்கப்பெயரும் பயன் வலுப்பெறும் திகதியும்.*

1. இவ்வொழுங்கு விதிகள், 2003 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, விமான மேறல் வரி (விமான சேவைகள் நிறுவனங்கள்) ஒழுங்கு விதிகள் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன் 2013......... ஆந் திகதி முதல் பயன்வலுப்பெறுதல் வேண்டும்.

*விமானமேறல் வரியினைச் சேகரித்தல்.*

2. இலங்கையிலிருந்தான ஒரு பறத்தலை இயக்குகின்ற விமான சேவைகள் நிறுவனமொன்றின் இயக்குநர் ஒவ்வொருவரும், இலங்கையிலிருந்து அத்தகைய பறத்தலில் புறப்பட்டுச் செல்கின்ற ஒவ்வொரு பயணி தொடர்பிலும், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையின் மூலம் அமைச்சரினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படுகின்றவாறான அத்தகைய தொகையிலான விமானமேறல் வரியொன்றை, சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (2) ஆம் உப பிரிவின் நியதிகளின்படி அத்தகைய பயணிக்கு அத்தகைய வரியாக கொடுப்பனவு செய்வதிலிருந்து விலக்களிக்கப்பட்டாலொழிய, சேகரித்தல் வேண்டும்.

*விமானமேறல் வரியைச் சேகரிக்கும் விதமும் முறையும்.*

3. (1) 2 ஆம் ஒழுங்குவிதியில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விமான சேவை நிறுவனமொன்றின் இயக்குநர் ஒவ்வொருவரும், விமானமேறல் வரியின் கொடுப்பனவும் சேகரிப்பும் அத்தகைய சேகரிப்பை பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்புதலும் பற்றிய வீதமும் முறையும் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்கியொழுகுதல் வேண்டும்.

(2) விமான சேவை நிறுவனமொன்றின் இயக்குனர் ஒவ்வொருவரும் பணிப்பாளர் நாயகத்திற்கு காலத்திற்கு காலம் தேவைப்படக் கூடியவராக, விமானம் பறத்தல் அட்டவணையின் இடப்பெயர்விலுள்ள பயணிகளும் இரண்டு வயதுக்குக் குறைவான பிள்ளைகளும் உட்பட, விமானத்தில் ஏற்றப்பட்ட பயணிகளின் எண்ணிக்கை ஏற்புடையற்பாலான பயணிகளின் பெயர்ப் பட்டியல்கள், விமானமேறல் வரியைச் சேகரித்தல் என்பன தொடர்பான அத்தகைய விபரத்திட்டுக்களை அல்லது வேறு தகவலைப் பணிப்பாளர் நாயகத்திற்கு கொடுத்துதவுதல் வேண்டும்.

*விமானச் சேவை நிறுவனங்கள் பணிப்பாளர் நாயகத்திற்கு வங்கி உத்தரவாதமொன்றை வழங்குதல்.*

4. (1) இலங்கையை விட்டுச் செல்கின்ற பறத்தலொன்றை இயக்குகின்ற விமான சேவை நிறுவனமொன்றின் இயக்குநர் ஒருவரும், பணிப்பாளர் நாயத்தினால் பணிக்கப்பட்டவாறு விமானமேறல் வரியாகச் சேர்க்கப்பட வேண்டிய பணங்களுக்கான பிணைப்பொறுப்பாகப் பணிப்பாளர் நாயகத்தினால் தீர்மானிக்கப்படக் கூடியவாறான ஒரு பணத்தொகையை பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வைப்பிடுதல் வேண்டும் அல்லது அவ்வாறு தீர்மானிக்கப்படக் கூடியவாறான அத்தகைய தொகைக்கு பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் வரையப்பட்ட ஒரு வங்கி உத்தரவாதத்தை கொடுத்துதவுதல் வேண்டும்.

(2) 2 ஆம் ஒழுங்குவிதியின் கீழ் விமானமேறல் வரியாகச் சேர்க்கப்பட வேண்டிய பணங்கள் தொடர்பாகக் கொடுக்கப்பட வேண்டிய வைப்புத் தொகையை அல்லது வங்கி உத்தரவாதத்தின் பெறுமதியைத் தீர்மானிப்பதில் பணிப்பாளர் நாயகம் பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்:-

(i) அவ்விமானத்தின் அதிகூடிய ஆசனக் கொள்ளளவு;
(ii) வாரத்துக்கான பறத்தலின் எண்ணிக்கை;
(iii) தொழிற்பாடுகளின் தன்மையும் நோக்கெல்லையும் ;
(iv) விமானமேறல் வரியாக பதினைந்து (15) நாட்களைக் கொண்டவொரு காலப்பகுதிக்கு விமானச் சேவை நிறுவனம் சேமிக்கக்கூடிய மதிப்பிடப்பட்ட பணத்தொகை ;

(3) பணிப்பாளர் நாயகத்தினால் தேவைப்பட்ட வங்கி உத்தரவாதத்தின் கால நீட்சி குறிக்கப்பட்ட எந்நேரத்திலும் ஓராண்டு காலப்பகுதியை விஞ்சலாகாது.

*பகிர்ந்தளித்தல் செயன் முறை.*

5. (1) பணிப்பாளர் நாயகம், விமானமேறல் வரியாக தம்மால் சேகரிக்கப்பட்ட பணங்கள் திறைசேரிப் பிரதிச் செயலாளரினால் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலம் அறிவிக்கப்பட்ட முகவர் நிறுவனங்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவதனை உறுதிப்படுத்துதல் வேண்டும் ;

(2) சட்டத்தின் (5) ஆம் பிரிவில் (1) ஆம் உப்பிரிவுகளின் தேவைப்பாடுகளுக்கமைய, பணிப்பாளர் நாயகத்தினால் வானூர்திகள் இயக்குநர்களிடமிருந்து விமானமேறல் வரியாக அவரினால் சேர்க்கப்பட்ட எல்லா பணங்களும், அத்தகைய பணம் பெறப்பட்ட திகதியிலிருந்து நாற்பத்தைந்து நாட்களினுள் கொடுத்துத் தீர்க்கப்படுதல் வேண்டும்.

6. பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்கு:- விபரத் திரட்டுக்களைத் தயாரித்தல்.

(அ) ஒழுங்கு விதியின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவினால் விதிக்கப்பட்டுள்ளதனைப் போன்று அட்டவணை I இல் தரப்பட்டுள்ள படிவத்தில் மாதாந்த விபரத்திரட்டொன்றையும் அத்துடன் ;

(ஆ) அட்டவணை 2 இல் தரப்பட்டுள்ள படிவத்திலான வரியைக் கொடுத்துத் தீர்ப்பது பற்றிய விபரங்களடங்கிய விபரத்திரட்டொன்றையும், கொடுத்துதவுதல் வேண்டும் ;

7. இவ்வொழுங்கு விதிகளில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலொழிய – பொருள் கோடல்.

“சட்டம்” என்பது 2003 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, நிதிச் சட்டம் என்று பொருள்படும்.

“விமான சேவை நிறுவனம்” என்பது பயணிகளை ஏற்றிச் செல்கின்ற இலங்கையிலிருந்தான பறத்தலை அல்லது பறத்தலை இயக்குகின்ற ஒரு விமான சேவை நிறுவனம் என்று பொருளாகும்.

“ பணிப்பாளர் நாயகம்” என்பது 2003 ஆம் ஆண்டின் 34 ஆம் இலக்க, இலங்கை குடியியல் வான்சேவை அதிகார சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை குடியியல் வான் சேவை அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் என்று பொருள்படும்.

‘‘ஒரு விமான சேவை நிறுவனத்தின் இயக்குநர்’’ என்பது ஒரு விமானம் தொடர்பாக சட்டத்திலுள்ளவாறான அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

## அட்டவணை I

விமானமேறல் வரியைச் சேகரித்தல்
(குடியியல் வான் சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய மாதத்திற்கு ஒரு முறையான விபரத் திரட்டுக்கள்)

ஆண்டு மாதம் காலப்பகுதி

| | விமான சேவை நிறுவனத்தின் பெயர் | பயணிகளின் எண்ணிக்கை | சேகரிக்கப்பட்ட தொகை (ரூபா) வி.வ. வட்டி (ஏதேனும் இருப்பின் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |
| | | | | |

## அட்டவணை II

செலவழிப்பு பற்றிய விபரங்கள்
(குடியியல் வான் சேவைப் பணிப்பாளர் நாயகத்தினால் திறைசேரிப் பிரதிச் செயலாளருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அறிக்கை)

ஆண்டு மாதம் காலப்பகுதி

| இலக்கம் | ஒழுங்கமைப்பு /நிதியம் | (%) | தொகை (ரூபா) | காசோலை இல. | திகதி | பற்றுச்சீட்டு இல. |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |
| | | | | | | |



இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.